# செந்தமிழ்

தொகுதி : 95 ஏப்ரல் 2000 பகுதி : 4

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## பொருளடக்கம்


1. வள்ளுவ மேலாண்மைப் பணிகள் ... 115

   -அறிஞர். பி. பத்மா

2. திருவள்ளுவரைத் தெரிந்துகொள்ளுங்கள் ... 119

   - பேரறிஞர். நா. பாலுசாமி

3. கனடா, அமெரிக்கா நாடுகளில் சில நாட்கள் ... 127

   - பேரறிஞர் பா. சூரியநாராயணன்

4. திருக்குறள் கட்டமைப்பைச் சிதைத்து ஓர் உரையாக்கம் ... 134

   - அறிஞர் க.சி. அகமுடை நம்பி

5. "அருங்கலம்" ... 138

   - பேரறிஞர். அ.மா. பரிமணம்

# வள்ளுவ மேலாண்மைப் பணிகள்

அறிஞர். பி.பத்மா

மேலாண்மை என்பது பணியாளர்களை நிருவகிக்கும் ஒரு கலையாகும். இது பணியைப் பணியாளர் மூலம் செய்து முடிக்க உதவுகிறது. நிறுவனத்தின் நன்கு வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காகக் கூட்டு முயற்சியுடன் ஒருங்கிணைக்கும் பணிக்கு மேலாண்மை இன்றியமையாதது. சுருங்கச் சொன்னால், மேலாண்மை என்பது தொழிலை நிருவகிக்கும் பணி மட்டுமன்றி, பணி நடைபெற ஆட்சி செலுத்துகிற நடவடிக்கையுமாகும்.

மேலாண்மைக்குப் பல்வேறு அணுகுமுறைகள் உள்ளன. பல சிந்தனையாளர்கள் மேலாண்மை என்ற சொல்லை அவரவர் வழியில் வரையறுத்துள்ளனர். அதேபோல், மேலாண்மைப் பணியிலும் பல ஆசிரியர்களுக்கிடையே ஒருமித்த கருத்தில்லை. எனவே, பலதரப்பட்ட அமைப்பைக் கருத்தில் கொண்டு செயலாற்றிய ஆசிரியர்கள், மேலாண்மைப் பணிகள் தொடர்பான பலதரப்பட்ட வரையறைகளையும் அளித்துள்ளனர்.

என்றி பேயால் **(HENRY FAYOL)** மேலாண்மைத் தத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுபவர். அவர் மேலாண்மையின் பணியினை ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார். அதையே கூன்சு மற்றும் ஓடோனல் **(KOONTZ AND O'DONNEL)** ஆகியோர் "திட்டமிடல், அமைத்தல், பணியாட்களை நியமித்தல், வழிகாட்டுதல் கட்டுப்படுத்தல் ஆகிய பணிகளின் தொகுதிகளுக்குள் வகைப்படுத்துதல் மேலாண்மைப் பணிகளின் மிகப்பயனுள்ள வகைப்பாடாகும்" என்று கூறுகின்றனர்.

ஆனால் உலூதர் கொலிகு **(LUTHER GULICK)** என்பவர் மேலாண்மையின் பணியினைக் குறிப்பிட **"PODSCORB"** என்ற சொல்லை உருவாக்கினார். இச்சொல்லிலுள்ள ஒவ்வொரு எழுத்தும்

ஒவ்வொரு பணியின் முதல் எழுத்தைக் குறிக்கும். எனவே **'P'** என்றால் திட்டமிடல் **(PLANNING)**, **O -** என்றால் **(ORGANISING)**, **D** -என்றால் **(DIRECTING)** இயக்குதல், **S** என்றால் **(STAFFING)** பணியாளர்களை நியமித்தல், **CO -** என்றால் **(CO-ORDINATING)** பணியாளர்களை ஒருங்கிணைத்தல், **R -** என்றால் **(REPORTING)** அறிவித்தல் மற்றும் **B -** என்றால் **(BUDGETING)** திட்டப்பட்டியல் ஆகும்.

உலகப் பொதுமறையான வள்ளுவத்தில் இப்பலதரப்பட்ட சிந்தனையாளர்களின் கருத்துக்களைக் காணும்போது வள்ளுவரை வாழ்த்தி வணங்காமல் இருக்க இயலுமா?.

## திட்டமிடுதல் : (PLANNING)

இலண்டி **(LUNDY)** என்பவரின் கருத்துப்படி, "என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எங்குச் செய்ய வேண்டும்? யார் செய்ய வேண்டும்? எப்படி அதன் விளைவுகளை மதிப்பிட வேண்டும்? என்பதையும் முன்னரே முடிவு செய்தல் 'திட்டமிடுதல்' ஆகும்". இக்கருத்தை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார் :

*"பொருள்கருவி காலம் வினையிட னொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."* - *குறள் 675*

## அமைத்தல் : (ORGANISING)

தியோ எய்மான் "நிறுவனத்தின் நடவடிக்கைகளை வரையறுக்கும் தொகுதியாகப் பிரித்தும், பின் அவற்றுக்கிடையேயுள்ள அதிகாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வழிமுறையை அமைத்தலாகும்" என்றும் கூறுகிறார் . இதனை வள்ளுவர் குறிப்பிடும்போது,

*"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
*பொறுத்தலும் வல்லது அமைச்சு"* - *குறள் 633*

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"* - *குறள் 517*

என்கிறார்.

## பணியாளர்களை நியமித்தல் : (STAFFING)

பணியாளர்களை நியமித்தல் என்பது மேலாண்மையின் அனைத்து நிலைகளுக்கும் தேவையான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், நியமித்தல், பயிற்சி அளித்தல், பதவி உயர்வு அளித்தல், பணி மாற்றம் செய்தல் போன்ற நிருவாகப் பணிகளின் தொகுப்பாகும். இக்கருத்தை வள்ளுவர்,

*"வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரி யனாகச் செயல்"* - *குறள் 518*

என உரைப்பார்.

## இயக்குதல் : (DIRECTING)

எய்மானின் வாக்கில் இயக்குதல், "செயல்முறைப் போதனைகளை அளிக்கும்போது பயன்படுத்தப்படும் வழிமுறைகளையும், நுட்பங்களையும் கொண்டு உள்ளது. இது செயல்முறைகள் பின்னர் திட்டமிட்டது போலவே நடைபெறுகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றது" என்பதாகும். இதையே வள்ளுவர்,

*"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல்"* - *குறள் 637*

எனக் குறிப்பார்.

## கட்டுப்படுத்துதல் : (CONTROLING)

கூட்சு மற்றும் ஓ டோன்னசு என்பவரின் வர்க்கில், "நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் அவற்றை அடைவதற்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவை நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் துணைப்பணியாளர்களின் செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தலும், திருத்துதலும், கட்டுப்படுத்துதலும் ஆகும்" இதனை வள்ளுவர்,

*"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்"* - *குறள் 549*

என உரைப்பார்.

## அறிவித்தல் : (REPORTING)

மேலாளர் மேலாண்மையாளருக்குத் துணைப் பணியாளர்களின் பணிகளைப் பற்றியும், திட்டங்கள் நிறைவேற்றியுள்ளதைப் பற்றியும் எடுத்துரைப்பது அறிவித்தலாகும். இதை வள்ளுவர் வாக்கில் பின்வருமாறு கூறலாம்:

*"அறிகொன்று அறியான் எனினும் உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்"* - குறள் 638

*"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை"* - குறள் 687

## திட்டப்பட்டியல் : (BUDGETING)

எல். ஏ. ஆலென், **(L.A. ALLEN)** என்பவரின் கருத்துப்படி, திட்டப்பட்டியல் என்பது எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திற்கெதிராக எதிர்பார்க்கப்பட்ட செலவைத் திட்டமிடும் ஒரு மதிப்பீடாகும். வேலையைச் செய்வதற்கும், குறிப்பிட்ட முடிவுகளை அடைவதற்கும் தேவையான நேரம், பணம் மூலப்பொருள்கள் மற்றும் பிற அலகுகளிலும் திட்டப்பட்டியலில் குறித்துரைக்கப்படலாம். இதனை வள்ளுவர்,

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"* - குறள் 385

என உரைப்பார்.

## முடிவுரை:

மேலாண்மைப் பணிகளை வகைப்படுத்தலில் மேலாண்மைச் சிந்தனையாளர் வேறுபடுகின்றனர். ஆனால், அத்துணைக் கருத்துக்களையும் வான்புகழ் வள்ளுவம் மிக அழகாக விளக்கியுள்ளது. மேலும், மேலாண்மைத் தத்துவங்களும் வள்ளுவத்தில் பொதிந்துள்ளன. மாட்சிமைகளின் மணிமகுடமாக அது விளங்குகிறது.

# திருவள்ளுவரைத் தெரிந்துகொள்ளுங்கள்

பேரறிஞர். *நா. பாலுசாமி*

***குறிப்பு*** : திருவள்ளுவரைத் தெரிந்துகொள்ளுங்கள் என்னும் தலைப்பில் தொடர்ந்து கட்டுரைகள் வெளிவரும். திருக்குறள் பொருட்பால் 25 அதிகாரங்களின் செய்திகள் காலத்தோடு பொருந்தும் விளக்கங்களுடன் வெளியிடப்படும். ***இறைமாட்சி*** அதிகாரம் தொடங்கி ***இடுக்கண் அழியாமை*** அதிகாரம் முடிய பொருட்பாலுள் அடங்கியுள்ளன. இப்பகுதியில் திருவள்ளுவர் குறிப்பிடும் அரசன், வேந்தன், மன்னன், இறைவன் முதலிய குறியீடுகள் முடியாட்சிக் காலத்தில் ஆளப்பட்டவை. மக்களாட்சி வளர்ந்துள்ள இக்காலத்தில் இக்குறியீட்டுப் பெயர்களுக்குப் பொருள் கொள்வதில் கவனம் வேண்டும்.

அன்றைய அரசன் கடவுளுக்கு ஒப்பாக மதிக்கப்பட்டான். அவனே சட்டம் இயற்றுபவன்; நிறைவேற்றுபவன்; நீதிவழங்குபவன். இம்முப்பெரும் உரிமைகளையும் அதிகாரங்களையும் அரசன் ஒருவனே பெற்றிருந்தான். இன்று வல்லாட்சி (Despotism) நடைபெறும் ஒரு சில நாடுகளில் மட்டில் இம்முறை இயங்குகிறது. ஆயின், மக்களாட்சி நடைபெறும் பாராளுமன்ற அமைப்பிலாயினும் (Parlimentary system), அரசுத் தலைவர் வழி அமைப்பிலாயினும் (Presidential Form of Govt.,), சட்டம் இயற்றல், நிறைவேற்றல், நீதிவழங்கல் ஆகிய மூன்றும் தனித்தனி அமைப்புக்களாகத் தொழில்படுகின்றன.

இக்கட்டுரை வரிசைகளைப்படிப்போர் அரசன், மன்னன், வேந்தன் என்னும் குறியீடுகள் நம் நாட்டைப் பொறுத்தவரை இந்தியத் தலைமை அமைச்சரையே குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும். நமது அரசமைப்புச் சட்டத்தின்படி முழு அதிகாரமும் செயலளவில் பிரதமருக்கே உண்டு; குடியரசுத் தலைவருக்கு அன்று. குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் அமைச்சரவையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவராகவே கருதப்படுவார். மாநிலங்களில் (Chief Minister) முதலமைச்சரைக் குறிக்கும். இங்குக்குறிப்பிடப் படும் திருக்குறள் கருத்துக்கள் பொதுவாக எல்லாமக்களுக் கும்; குறிப்பாக நாடாள்வோர்க்கும் பொருந்துவன என்பது மனங்கொள்ளத்தகும். இனி, இறைமாட்சி பற்றி கவனிப்போம்.

## இறைமாட்சி - அதிகாரம் 39

இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் ஆளும் தலைவருக்குரிய பல்வேறு குறியீடுகளும், அரசனின் நற்குணங்களும் நற்செயல்களும் விவரிக்கப்பட்டுள்ளன. நாடாளும் தலைவன் இறைவன், மன்னன், அரசன், வேந்தன் முதலிய பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றான். இப்பெயர்கள் எல்லாம் ஆழ்ந்த பொருள் நுணுக்கங்கள் கொண்டவை; எக்காலத்திற்கும் எந்த நாட்டிற்கும் பொருந்துமாறு அமைக்கப்பெற்றுள்ளன.

இப்பகுதியில் அரசு என்பது தேயம் அல்லது உரிமை பெற்ற நாடு (Soverign State or Nation) என்பதைக் குறிக்கும். அரசின் ஆட்சித் தலைவன் அரசன் எனப்பட்டான்; வேந்தன் என்னும் பெயர் மக்களால் விரும்பப்படுபவன் என்னும் பொருளை உடையது

இச்சொல், 'வெம்மை' என்னும் உரிச்சொல்லின் அடியாகப் பிறந்து, "வேண்டல்" என்னும் பொருளைத் தாங்கியுள்ளது. வேண்டல் - விரும்புதல். மன்னன் என்பதும் மன்னுதல் என்னும் வினையடியில் பிறந்து மக்களுடன் பொருந்தி வாழ்பவன் எனப் பொருள்படும். குடிகளைத் தழுவி ஆள்பவன் எனப் பொருள். மன்னுதல் நிலைபெறுதல் என்றும் பொருள்படும். மக்களுடன் ஒன்றி ஆளும்வரை அவன் ஆட்சி நீடித்திருக்கும் என்பதாம். இறைவன் என்பது கடவுளைக் குறிக்கும் சொல். அஃதாவது, தெய்வத் தன்மையை உடையவன் அரசன் என்பதாம். உலகத்தையே காக்கும் இறைவனைப் போல, நாட்டைக் காக்கும் அரசனும் இறைவன் எனப்பட்டான். சிறப்பாக, நீதிதவறாது செங்கோல் நடத்தும் அரசனையே இறைவன் என்றனர். இவ்வாறு திருவள்ளுவர் நாடாள்வோனைக் குறிக்கப்பயன்படுத்தி யுள்ள பல்வேறு குறியீடுகளும் (பெயர்கள்) இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்துவனவே எனக்கொள்க.

இனி, முழு உரிமைபெற்ற (சுதந்திரமான) ஒரு நாடு பின்வரும் ஆறு அங்கங்களைப் (உறுப்புக்கள்) பெற்றிருந்தல் வேண்டும் என்பார் திருவள்ளுவர். அவை, 1) படை 2) குடி 3) கூழ் 4) அமைச்சு 5) நட்பு 6) அரண். இவ்வாறனுள் ஒன்று இன்றெனினும் நாடு உரிமை பெற்ற நாடாகாது என்பது குறிப்பு.

பகையை வெல்லவும் அமைதியை நிலைநாட்டவும் படை வேண்டும். படையை வைத்துக் கொள்ளும் உரிமை ஓர் உரிமை பெற்ற நாட்டிற்கே உண்டு. தனிப்பட்டோர் படைகளை வைத்துக்கொள்ளல் விலக்கப்பட்டுள்ளது. குடி என்பது குடிகளை உடைய நாடாகும் என்பது; அஃதாவது மக்கள் வாழத்தகும் நிலப்பரப்பாகும் (Territory). கூழ்

என்பது உணவு. இங்கு அதற்கு ஏதுவாகிய பொருள் குறித்து நிற்கிறது. திருவள்ளுவர் பொருளாகிய செல்வத்தை நாட்டின் அங்கமாகவே கருதுகிறார். நாடுபற்றியும் பொருள் பற்றியும் பின்னர் விரிவாகப் பேசுகிறார் வள்ளுவப் பெருந்தகை. அமைச்சு என்பது அரசோடு அமைந்து உதவும் அமைச்சரவை ஆகும் (Ministry). நட்பு என்பது ஒரு நாடு எவ்வளவு வளமும் வலிமையும் உடையதாக இருப்பினும் நட்பு நாடுகளைப் (Allies) பெற்றிருத்தல் இன்றியமையாதது. இது பற்றிப் பின்னர் வள்ளுவர் 17 அதிகாரங்களில் மிக விரிவாகப் பேசுகிறார். அரண் என்பது பாதுகாப்புக்குரிய இயற்கை அரண்கள். உயர்ந்து பனிபடர்ந்துள்ள மலைத்தொடர்கள் ஆழ்ந்து அகன்ற கடல்கள், பரந்து செறிந்த காடுகள் முதலியன ஒருநாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும். இவ்வாறு, படை (Defence Forces), நிலப்பரப்பு (Territory), குன்றாத வளம் (Wealth), அரசாங்கம் (Government), நேச நாடுகளின் தொடர்பு (Allied Nations), இயல்பாக அமைந்துள்ள அரண்கள் முதலியன ஒரு உரிமைபெற்ற நாட்டின் அங்கங்கள் ஆகும்.

இனி, இத்தகைய அரசின் தலைவன் அல்லது பிரதமர் எத்தகையவராக அமைதல் வேண்டும் என்பதனை மிகவிரிவாக விளக்குவார் வள்ளுவர். ஆட்சித்தலைவனுக்குப் பின்வரும் குணங்கள் அல்லது பண்புகள் அமைதல் வேண்டும் அவை,

| | | |
|---|---|---|
| அஞ்சாமை | மானம் உடைமை | முறை செய்தல் |
| ஈகை | இயற்றல் | பொறுமை |
| அறிவு | ஈட்டல் | கொடை |
| ஊக்கம் | வகுத்தல் | அணி |
| தூங்காமை | காட்சிக்கு எளிமை | குடியோம்பல் |
| கல்வி | துணிவுடைமை | கடுஞ்சொல் இன்மை |

மேற்கூறிய 20 இயல்புகளை ஓர் ஆட்சித்தலைவன் பெற்றிருப்பின், அவனே எடுத்துக்காட்டாக விளங்கத்தக்கவன். தலைமை அமைச்சன் அல்லது குடியரசுத் தலைவன் ஆவான் எனக்கூறும் திருக்குறள்..

ஆட்சிப் பதவி ஏற்கும் ஒருவன் மனத்திண்மை பெற்றிருத்தல் வேண்டும். மனவலிமை அல்லது உறுதிப்பாடு திண்மை எனப்படும். இதுவே அஞ்சாமையாம். 'அச்சம்தவிர்' என்பதும், 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பதும் உணர்க. இப்பண்பு அரசாங்கத்தை நடத்திச் செல்பவனுக்கு வேண்டப்படும் முதன்மையான குணமாகும். ஈகை என்பது கொடை. இது படைக்கு உரியது. நாட்டின் புறப்பகை உட்பகை ஆகிய இரண்டுவகைக் கேடுகளையும் போக்கி, அமைதி நிலைநாட்டும் போர்வீரர்கள் - காவல் துறையினர் - முதலியோர் குடும்பம் நடத்துதற்குப் போதிய ஊதியம் மற்றும் பிற நலன்கள் பெற்றுக் கவலையின்றிக் கடமையாற்றும் வகையில், அவர்கள் அரசால் பெரிதும் கவனிக்கப்படல் வேண்டும். இதில் அரசு தளர்ச்சியோ தயக்கமோ காட்டல் கூடாது. அறிவு என்பது அரசின் அங்கங்கள் ஆறனையும் ஆள்வதற்கு வேண்டப்படுவதாம். இதுபற்றிப் பின்னர் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் விரிவாகக் காணலாம். இனி, ஊக்கம் என்பது உள்ளக் கிளர்ச்சி அல்லது மன எழுச்சியாகும் ஆட்சித்தலைவன் சில திட்டங்களை அறிமுகப்படுத்தச் செயலாற்றும் போது உள்ளக்கிளர்ச்சியோடும் முனைப்போடும் இருத்தல் வேண்டும். காரியம் முட்டின்றி முடியும் வரை உந்துதலும் எழுச்சியும் சிறிதும் தளர்தல் கூடா. அப்போதுதான் கருதிய பயன்கிட்டும்.

இனி, தூங்காமையாவது, மேற்கொள்ளப்பட்ட செயல் (திட்டம்) இனிது நிறைவெய்தும்வரை இடையீடு இன்றித் தொடர்ந்து கண்காணிக்கப்படல் வேண்டும் என்பதாம். அஃதாவது எடுத்த காரியம் காலக்கழிவு (தாமதம்) இன்றி விரைவாக முடியவேண்டும். காலக்கழிவு செலவினங்களை அதிகப்படுத்தும், இடையில் நின்றுவிடவும் கூடும். ஆகவே விழிப்புடன் விரைந்து செயல்படல் இன்றியமையாதது. கல்வி என்பது பற்றிப்பின்னர் விரிவாகக் காணலாம் (கல்வி அதிகாரம்) துணிவுடைமை என்பது ஆண்மை உடைமையாம். அஃதாவது, செயல்படும்போது ஏற்படும் தடைகளைக் கடந்து வெற்றிப்பாதையில் வீறுடன் நடைபோடுவதாம். பிறர் எதிர்ப்புக்ளையும் இடையூறு களையும் (இயற்கையாகவோ செயற்கையாகவோ வரின்) பொருட்படுத்தாமல் வினைமுடித்தலாம்.

மேலும் அரசனுக்கு மானஉணர்வு வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். நாட்டிற்கு எங்கிருந்தும் எவராலும் தாழ்வுவராமல் பார்த்துக் கொள்வதே மானம் எனப்படும். மானம் என்பது நிலையில் தாழாமையாம். அஃதாவது, நாட்டின் பெருமையும் புகழும் காப்பாற்றப்படவேண்டும். இதற்குரிய முறையில் தலைவன் செயல்படல் வேண்டும்.

ஒரு நாட்டின் ஆட்சித் தலைவன் மிகவும் கவனம் செலுத்த வேண்டியதுறை வருவாயைப் பெருக்குதலாம். பொருள் வலிமை இன்றேல் எந்நாடும் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது போகும். ஆகவே, மேலும் மேலும் நாட்டின் வருவாய்க்குரிய வழிமுறைகளைப் புதுவதாகக் காண்டல் வேண்டும். இயற்கைச்

செல்வங்களைப் (இரும்பு, பொன், தாமிரம், நிலக்கரி முதலியன) பெருக்கவேண்டும். வரிகள் மூலமும், ஏற்றுமதிகள் மூலமும் செல்வப்பெருக்கம் ஏற்படலாம். அவ்வாறு திரட்டப்படும் செல்வங்களை, வீண் செலவுகள், பயன்தாராப் பகட்டான செயல்முறைகள் மூலம் சிதறிப்போகாமல் தொகுத்து வைத்தல் வேண்டும். அப்போதுதான் திட்டங்களிலும் தொழில்களிலும் கடன் பெறாமல் முதலீடுகள் செய்தல் இயலும். இவ்வாறாக, வருவாயைப் பெருக்கலும், பெருக்கிய செல்வத்தைக் காத்தலும் காத்தவற்றை உரிய வகையில் சமுதாய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் செலவிடுதலும் அரசின் கடமைகளாம். இதற்குத் தனித்திறமை தேவைப்படும்.

இனி, நாட்டின் தலைவன் மக்கள் காணவிரும்பின் எளியனாகக் காட்சியளித்தல் வேண்டும். குறைகளைக் கூறவும் நிறைகளைப் பெறவும் ஆட்சித்தலைவனைக் காணும் வகையில், அவன் எளிமையாக நடந்துகொள்ளல் இன்றியமையாதது பதவியில் அமர்ந்தபின், அமர்த்திய மக்கள் காண்பதற்கே முடியாத நிலை ஏற்படின், வெறுப்பும் எதிர்ப்பும் ஏற்படும். மேலும் ஆட்சித்தலைவன் மக்களிடம் கடுமையாக நடந்துகொள்ளலும் புண்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தாமையும் அவனுக்குப் பல நன்மைகளை விளைவிக்கும்.

அக்காலத்தில் அரசன் நீதிபதியாகவும் செயல்பட்டான். குறைகளையும் வழக்குகளையும் நடுநிலை தவறாது, இன்னார் இனியர் எனப் பாராது துலாக்கோல் போல் அமர்ந்து நீதிவழங்கல் வேண்டும். இதனை

நடுநிலைமை என்னும் அதிகாரத்தில் விரிவாகப் பேசியுள்ளார். பொறுமை ஆட்சியாளனுக்கு மிகவும் வேண்டப்படுவதாகும். இதனைப் பொறையுடைமை என்னும் அதிகாரத்தில் விரிவாகக் கூறியுள்ளார். இனி அவன் அளி செய்தல் வேண்டும் என்கிறது திருக்குறள். அளி என்பது இனிய சொற்களைக் கூறுதலாம். நொந்துவரும் மக்களுக்கு இதம் தரும் சொற்களால் மகிழ்ச்சி தரமுடியும். வேண்டுவார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து உதவுதலும், குடிமக்களைப் பேணுதலும் நெறிதவறாமையும் ஆட்சியாளனிடம் அமைய வேண்டிய பிற இயல்புகளாம்.

இறைமாட்சி என்ற இவ்வதிகாரத்தில் ஓர் ஆட்சித் தலைவன் எத்தகைய பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் எவ்வாறு செயல்படல் வேண்டும் என்பதும் விரிவாக உணர்த்தப்பட்டுள்ளமை மனங்கொள்ளல் தகும். இவ்வதிகாரத்தில் ஆட்சியாளனுக்கு ஈகைப்பண்பும் கொடைப்பண்பும் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இரண்டிற்கும் சிறிது வேறுபாடு உண்டு. ஈகை என்பது அரசுப்பணியாளர்க்கும், சிறப்பாகப் படையினர்க்கும் அவ்வப்போது அளிக்கப்படவேண்டிய ஊதிய உயர்வு போன்றவை; கொடை என்பது நாட்டில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும், நலிவுற்ற பிற நாடுகளுக்கும் வழங்கப்படும் நிதியுதவியாகும். மக்களாட்சி நடைபெறும் நாடுகளின் தலைவர்களுக்கும் குறிப்பாக இந்திய நாட்டவர்க்கும் மேலே கூறிய கருத்துக்கள் பெரிதும் பயன் படுவனவாம்.

(தொடரும்)

# கனடா, அமெரிக்கா நாடுகளில் சில நாட்கள்

பேரறிஞர் **பா. சூரியநாராயணன்**

## சாலைப்பயணம்:

கனடாவிலிருந்து தென்மேற்குத் திசையிலுள்ள அமெரிக்க நாட்டின் எல்லையில் உள்ளது பஃபலோ **(BUFFALOW)** நகரம். நயாகரா ஆற்றின் குறுக்கேயுள்ள உயரமான பெரிய பாலத்தைக் கடந்ததும் வேற்றுநாட்டின் பாதுகாப்புக்காவலர் எங்களுடைய வெளியேறும் சீட்டு, நுழைவுச் சீட்டு முதலியவற்றைப் பார்த்துவிட்டு, உந்து வண்டியில் புகையிலை முதலிய பொருட்கள் இல்லை என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, எங்களைப் போகவிட்டனர். சாலையின் இருபுறமும் பரந்தவெளிகள் கனடாவில் காணப்பட்டதற்கு மாறாக, இப்பொழுது அமெரிக்காவில் மரங்கள் அடர்ந்த குன்றுகளுக்கிடையே, அகன்ற வளைந்த சாலையில் உந்து வண்டி சென்றது. ஒரு பெரிய ஆற்றின் இருபுறமும் அமைந்த பிட்ஸ்பர்க் என்ற தொழில் நகரத்தை மாலை நேரத்தில் அடைந்தோம். அது நகரமாயினும் அங்கு வீடுகள் இங்கு இருப்பதைப் போல் தொடர்ந்து இல்லாமல், ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் தூய்மையாகவும் இருந்தன. ஊருக்கு வெளியே மரங்களடர்ந்த இடத்தில் ஒரு பெரிய பெருமாள் கோயிலிருக்கிறது. அதில் மற்றத் தெய்வங்களுக்கும் சிறு கோயில்கள் இருக்கின்றன. தமிழர், ஆந்திரர், வடஇந்தியர் ஆகியோர் அங்குக் கூட்டமாக வந்து வழிபாடு செய்கின்றனர். ஆயினும் கோயிலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுகின்றனர். இரவு ஒரு விடுதியில் தங்கி மறுநாட் காலை தெற்கிலுள்ள

கென்டக்கி மாநிலத்தில் உள்ள பைக்ஷில் என்ற சிறிய ஊருக்கு என் மூத்த மகனைப் பார்க்கப் போனோம். இப்போது இருபுறமும் உயர்ந்த மலைகள், ஊடறுத்துப் போகும் பேராறுகள் காணப்படுகின்றன. தட்பவெப்பநிலையும் சீராக இருந்தது. பைக்ஷில் மருத்துவமனையில் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் மருத்துவக் கல்விப்பயிற்சிக்கு முன்னோடியாக இலவசமாகச் சிறு மருத்துவப்பணிகள் செய்கின்றனர்.

## பல்முறை நுழைவுச் சீட்டு:

மீண்டும் கனடாவிலுள்ள செயின்ட் காதரைன்சுக்குத் திரும்பி வரும்போது எல்லையில் கனடா நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் எங்களுடைய நுழைவுச் சீட்டு பலமுறை நுழைவு இசைவு **(MULTIPLE ENTRY VISA)** இருக்கிறதா என்று பார்த்தபின்னர் மேலே செல்ல விடுகின்றனர். இதற்குச் சிறிது கூடுதல் கட்டணம் நுழைவுச் சீட்டு வாங்கும் போதே செலுத்துதல் வேண்டும். இந்தவகை நுழைவுச் சீட்டு இருந்தால்தான் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கும், மீண்டும் அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கும் செல்லுதல் இயலும். ஒருமுறை நுழைவு இசைவுச் சீட்டு **(SINGLE ENTRY VISA)** இருந்தால் இவ்வாறு இருநாடுகளுக்குமிடையே பலமுறை வந்துபோதல் இயலாது, ஒருமுறைதான் போதல் இயலும்.

## வாஷிங்டன்:

சிலநாட்கள் சென்றபின் அமெரிக்கக் கூட்டாட்சியின் தலைநகரமான வாஷிங்டனை நோக்கிச் சிறிது தென்கிழக்குத் திசைநோக்கிச் சென்றோம். அமெரிக்க நாடு முதலில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து ஒரு புரட்சி (அல்லது சுதந்திரப்போர்) செய்து 1783 இல் ஒரு சுதந்திர நாடாக ஆயிற்று. அப்போது இருந்த பிரிட்டிஷ் அரசர் மூன்றாம் ஜார்ஜ், எதேச்சதிகாரப்போக்குடன்,

13 அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடைய சுதந்திர உணர்வுகளையும், மக்களாட்சி மரபுகளையும் மதிக்காமல் அடக்குமுறையைப் பின்பற்றியதால் அமெரிக்கர் புரட்சி செய்து பிரிட்டனைத் தோற்கடித்தனர். அந்தப் புரட்சிக்குத் தலைமை ஏற்று, பிரிட்டிஷ் படையை யார்க்டவுன் களத்தில் தோற்கடித்தவர் ஜார்ஜ் வாஷிங்டன் என்பவர். போர் முடிந்ததும் அவருடைய தலைமையில் சுதந்திரமடைந்த அமெரிக்கர் ஒரு சுதந்திரக் குடியரசாகவும், மக்களாட்சி அரசாங்கத்தை உடைய ஒரு நாடாகவும் தங்களை அமைத்துக் கொண்டு, மிக்க திறமையும், நேர்மையும் உடைய, அதிகாரப்பற்று இல்லாத ஜார்ஜ் வாஷிங்டனை அமெரிக்கக் குடியரசின் முதல் தலைவராக (ஜனாதிபதியாக) இருமுறை தேர்ந்தெடுத்தனர் (1789 - 1797). அம்மக்கள் அவரிடம் மிக்க மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருந்தனர். அமெரிக்காவின் செல்வவளம் பெருகப் பெருகத் தெற்கிலும், மேற்கிலும் பல நாடுகளும், வடக்கில் அலாஸ்க்காவும், பசிபிக்கில் ஹவாய்த் தீவுகளும் அதனோடுசேர்ந்து 5 மாநிலங்களை உடைய செல்வவளம்மிக்க, உலகநாடுகளால் மதிக்கப்படக்கூடிய வலிமை உடைய குடியரசு மக்களாட்சி நாடாக விளங்குகிறது.

அமெரிக்கர்களுடைய சுதந்திர விருப்பத்துக்கும், மக்களாட்சிப் பற்றுக்கும் எடுத்துகாட்டுகளாக அவர்களுடைய பல சாலைகளும், கட்டடங்களும் விளங்குகின்றன. வாஷிங்டனை நோக்கிச் செல்லும் பெரியசாலைக்கு மக்களாட்சிச் சாலை என்றும் **(DEMOCRACY ROAD)**, அந்த நகரத்திலுள்ள இரண்டு பெரிய கட்டடங்களுக்கும் அரசியலமைப்புக் கட்டடம் என்றும் **(DEMOCRACY BUILDING)**, சுதந்திர மண்டபம் **(LIBERTY HALL)** என்றும், நியூயார்க் அருகில் சுதந்திர தேவியின் சிலை இருக்கும் சிறிய தீவுக்கு **(LIBERTY ISLAND)**

என்றும் பெயர்கள் வழங்குவதைக் காணலாம். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதில் பங்கு கொண்ட ஹாமில்டன், ஜெபர்சன் ஆகியோரது பெயர்களும் பல கட்டடங்களுக்கும் சாலைகளுக்கும் இடப்பட்டுள்ளன. ஜார்ஜ் வாஷிங்டனுடைய பெயரே அமெரிக்கக் குடியரசின் தலைநகரத்துக்கு இடப்பட்டது. முதலில் சுதந்திரப் பட்டயத்தை **(DECLARATION OF INDEPENDENCE)** வரைவதில் பங்குகொண்ட 13 குடியேற்ற நாடுகளில் ஒன்றான கனக்டிகட் **(CONNACTICUT)** மாநிலத்திலுள்ள உந்துவண்டிகளில் உரிம எண்ணைக்குறிப்பிடும் சிறுதகட்டிலும் அரசியலமைப்பு மாநிலம் **(CONSTITUTION STATE)** என்று வரையப்பட்டிருந்தது. இவையெல்லாம் அவர்களுக்குச் சுதந்திரத்திலும், குடியரசு அமைப்பிலும், மக்களாட்சி முறையிலும் இருக்கும் மதிப்பையும், நம்பிக்கையையும் எடுத்துகாட்டுகின்றன. உண்மையில் வாஷிங்டனிலிருந்த நாட்டுப்பற்றும், திறமையும், நேர்மையும், தன்னலமற்ற தொண்டு மனப்பான்மையும் இந்தியா போன்ற வளரும் மக்களாட்சி நாடுகளின் தலைவர்களுக்கு வழிகாட்டிகளாகுமென்றால், அது மிகையாகாது. அந்த நகரத்தை ஒரு வாடகை உந்து வண்டியில் சுற்றி வந்தோம். ஓட்டுநரே, வழிகாட்டியாகவும் **(GUIDE)** இருந்து ஒவ்வோர் இடத்தின் பெயரையும் கூறிச் சுட்டிக்காட்டி வந்தார். அந்த நகரத்தில் உலக சமயங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய வழிபாட்டு நிலையங்களும், உலக நாடுகள் ஒவ்வொன்றின் தூதரகங்களும் இருக்கின்றன. செனட் என்னும் மேல்சபை, பிரதிநிதிகள் சபை **(HOUSE OF REPRESENTATIVES)** ஆகியவை கூடும் மிகப்பெரிய கட்டடத்திற்கு காபிட்டால் **(CAPITAL)** என்று பெயர். பண்டைய ரோமானியக் கடவுள் ஜூபிடர் என்பாருக்கு ரோமில் கேபிட்டொலைன் குன்றின் மீது கட்டப்பட்டிருந்த கோயிலை

நினைவுபடுத்துவதாக நாட்டின் மிகப்பெரிய சட்டமன்றம் **(CONGRESS)** கூடும் கட்டடத்திற்குக் காபிட்டால் என்னும் பெயர் அமைந்துள்ளது. சட்டமன்றக் கட்டடத்தின் உச்சியில் அரைக்கோளவடிவிலமைந்துள்ள குவிமாடத்தின் உச்சியின் **(DOME)** அமெரிக்கரால் போற்றப்படும் மக்களாட்சிக் கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறது சுதந்திரச் சிலை **(STATUE OF FREEDOM)** இது நியூயார்க் துறைமுகத்தினருகிலுள்ள சுதந்திர தேவியின் சிலை அன்று. சட்டமன்றத்தினுள் ஒவ்வொரு மாநிலத்தாலும் அளிக்கப்பட்ட. அந்த மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு புகழ்மிக்க அறிஞர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கட்டடத்திலுள்ள வாஷிங்டனுக்கு ஒரு பெரிய சிலையும், அந்தக் கட்டடத்தினுள் ஒரு பெரிய பெட்டகத்தினுள் அமெரிக்கரின் மக்களாட்சி அரசியலமைப்பைத் தாங்கிய **(CONSTITUTION)** முதல் ஏட்டுப்படிவமும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

## ஆபிரகாம் லிங்கன்:

மனிதாபிமானத்துக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், தன்னலமற்ற உழைப்பிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் ஆவர். இவருக்கு ஒரு பெரிய சிலை நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்டுள்ளது. இவர் பெயரிலும் பலநகரங்கள் உள்ளன. அமெரிக்காவில் பண்ணைத் தொழில் செய்து அடிமைகளாக வாழ்ந்த எண்ணிக்கையில் பெரிய நீகிரோ மக்களை சுதந்திரக் குடிமக்களாக ஆக்கியவர் ஆபிரகாம் லிங்கன். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இவரை 1861 - இல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர். உடனே தெற்கத்திய மாகாணங்கள் அடிமை முறையைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கக் கூட்டாட்சியினின்றும் பிரிந்து சென்றன. எனவே அடிமை முறையை முற்றிலும்

அமெரிக்காவில் ஒழித்து, அந்தக் கூட்டாட்சியினின்றும் எந்த மாநிலமும் பிரிந்து செல்லாமல் தடுத்து, எல்லாம் ஒன்றாக இணைந்த குடியரசு மக்களாட்சி நாடாக இருத்தல் வேண்டுமென்ற நோக்கத்தோடு லிங்கன் 1861 முதல் 1865 வரை வெற்றியாக உள்நாட்டுப்போரை நடத்தினார். வடமாநிலங்களின் படை 1863 - ல் கெட்டிஸ்பர்க் போரில் வெற்றி பெற்றது. இந்தப்போர்க்களத்தில் தான் "மக்களாட்சி என்பது மக்களுக்காக, மக்களால் நடைபெறும் சிறந்த ஆட்சி இகழ்ந்த ஆட்சிமுறை ஆகும்" என்ற ஒரு உயரிய கருத்தை வெளியிட்டு லிங்கன் புகழ்மிக்க சொற்பொழிவாற்றினார். அவர் 1862-ல் விடுத்த ஓர் விளம்பரம் அமெரிக்க நாட்டிலுள்ள நீகிரோ அடிமைகளெல்லோரையும் சுதந்திரக்குடிமக்களாக ஆக்கிற்று. இரண்டாவது முறையாக அவர் 1865-ல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது அவரை பூத் என்ற ஒரு கயவன் சுட்டுக் கொன்றுவிட்டான். அவர் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வளர்ந்தவர். பொறுமை, விடாமுயற்சி, நேர்மை, மக்கட்பற்று முதலிய சீரியபண்புகளால் அவர் நாட்டவர் யாவருடைய நம்பிக்கையையும் பெற்றார். உயர்ந்த நோக்கங்களுக்காக உயிரை ஈந்த நல்லோர் அவர். அவர் நீகிரோ இனத்தாரைச் சுதந்திரக் குடிமக்களாக ஆக்கியதனால், இப்பொழுது அந்நாட்டில் எல்லாத்துறைகளிலும் நீகிரோமக்கள் வெள்ளை இனமக்களுக்கு ஒத்த நிலையில் பல பணிகளைச் செய்துவருகின்றனர். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்திற்கு 1865-ல் செய்யபட்ட 13-வது திருத்தம் அந்நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் அடிமைமுறையை நீக்கிற்று.

காங்கிரஸ் கூடும் பெரிய மண்டபத்தைத் தவிர, ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை, சட்டமன்ற நூலகம், உச்சநீதிமன்றம் முதலியவையும் அங்குக் காணத்தக்கவை.

குடியரசுத்தலைவர் பகுதியும், அவருடைய அலுவலகங்களும் உடைய வெள்ளை மாளிகை உயரமான, ஒரு அரைக்கோளவடிவமுள்ள ஒரு கோபுரத்தை உடைய அழகிய கட்டடம் ஆகும். அது அமைந்துள்ள பெரிய வளாகத்தினுள் எவரும் புகுதல் இயலாது. வளாகத்தைச் சுற்றிக் கனமான இரும்புக் கம்பிகள் வேலியாக அமைந்துள்ளன. வளாகத்தின் ஓரத்திலுள்ள சாலையிலிருந்துதான் வெகு தொலைவிலுள்ள வெள்ளைமாளிகைக் கட்டடத்தையும் அதன் மீதுள்ள அரைக்கோளக் கோபுரத்தையும் காணுதல் இயலும். முதலாவது குடியரசுத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் முதல் (1789 முதல்) இப்போது குடியரசுத் தலைவராக உள்ள பில் கிளின்ட்டன் வரை 38 பேர் அப்பதவியிலிருந்து வந்துள்ளனர். அவர்கள் யாவருக்கும் இந்த வெள்ளை மாளிகைதான் அலுவலகமாகவும் பதவிக்காலத்தில் வாழும் இடமாகவும் இருந்து வந்துள்ளது. அங்குள்ள குடியரசுத் தலைவருடைய பதவிக்காலம் 4 ஆண்டுக்காலம். இவர் சட்டமன்ற உறுப்பினர் அல்ல, அதற்குப் பொறுப்புள்ள ஆட்சியாளரும் அல்ல. எனவே இந்தியாவிலும், இங்கிலாந்திலும் தலைமை அமைச்சரை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் வாயிலாகப் பதவி நீக்கம் செய்வது போல, அமெரிக்கக் குடியரசுத் தலைவரை காங்கிரஸ் சட்டமன்றப் பதவி நீக்கம் செய்ய இயலாது. இவர் உச்சநீதிமன்றத்தால் விசாரிக்கப்படக்கூடிய பெருங்குற்றம் எதுவும் செய்யாதவரையில் இவருடைய பதவி நிலையானது தான். வாஷிங்டன் நகரத்தில் காங்கிரஸ் கூடும் பெரிய மண்டபத்தின் உச்சியிலுள்ள அரைக்கோளக் கோபுரத்தின் உயரத்தை விட அதிக உயரமான கட்டடம் எதனையும் அதன் சுற்றுவட்டாரத்தில் எவரும் கட்டுதல் மரபு அன்று.

வாஷிங்டன் நகரத்தில் பயணிகள் காண்பதற்கு அரசாங்கக்கட்டடங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே பிற்பகலில் கிழக்கு நோக்கி நியூயார்க் துறைமுக நகரத்துக்குச் சென்றோம்.



(தொடரும்...)

# திருக்குறள் கட்டமைப்பைச் சிதைத்து ஓர் உரையாக்கம்

அறிஞர். க.சி. அகமுடை நம்பி

உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு இதோ, மற்றுமோர் உரை என்ற மகிழ்ச்சி, பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் “திருக்குறள் - உரையுடன்” என்ற நூலைப் பார்த்தவுடன் ஏற்பட்டது. பட்டிமன்றப் புகழ்ப் பேராசிரியர் திருக்குறளுக்கு உரை எழுதியிருப்பது, மக்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் என்ற நினைப்புத் தோன்றியது.

ஆனால், இவருடைய உரைநூலைப் புரட்டிப் பார்த்தபோது மகிழ்ச்சிக்கு மாறாக ஏற்பட்டது அதிர்ச்சி தான். இந்த நூலில், திருக்குறளின் கட்டமைப்பே சிதைக்கப்பட்டுள்ளது. பொருத்தமற்ற முறையில் அதிகாரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

திருக்குறளில் அதிகார வரிசையையோ ஒவ்வோர் அதிகாரத்திலுள்ள பத்துக்குறள்களின் வரிசையையோ சில உரையாசிரியர்கள் ஓரளவு மாற்றியமைத்துள்ளனர் என்பது உண்மைதான். ஆனால், இதன் முப்பால் பகுப்பைப் பிளக்கும் செயலைச் செய்திட இந்தப் பேராசிரியருக்கு மட்டும் எப்படித் துணிவுவந்தது?

அறம், பொருள், இன்பம் என்ற முப்பால்களைக் கொண்டுள்ளதால் திருக்குறளுக்கு 'முப்பால்' என்ற பெயரும் வழக்கில் உள்ளது. டாக்டர் மு. 'வரதராசனார் தமது 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில், இன்பத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்று வரிசைப்படுத்திக் குறள் விளக்கக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆனால், 'திருக்குறள் தெளிவுரை' என்ற தமது உரைநூலில், முப்பால் வரிசையை டாக்டர். மு.வ. மாற்றவில்லை.

மேலும், முப்பால் வரிசையை மாற்றுவது என்பது வேறு, முப்பால் அமைப்பையே சிதைப்பது என்பது வேறு. முன்னதைச்

சுட்டிக் காட்டி, திருக்குறள் கட்டமைப்பையே சீர்குலைத்துள்ள தமது செயலை இவ்வுரையாசிரியர் நியாயப்படுத்திக்கொள்வது நேர்மைக்குப் புறம்பானது.

அறத்துப்பால், பொருட்பால் இரண்டும் மக்களுக்குரிய அறிவுரைகளாகவும் அறவுறுத்தல்களாகவுமே அமைந்துள்ளன. ஆனால், இன்பத்துப்பால்? இதன் அமைப்பு, தலைவன் தலைவி இருவரின் உணர்வுக்களமாகவும் நாடகப்பாங்காகவும் அமைந்துள்ளது. இந்த அமைப்புடன் இன்பத்துப்பால் தனித்து விளங்குவதற்கே உரியது.

சிறப்பான இவ்வமைப்பு முறையைக் கருதிப் பார்க்காமல், அறத்துப்பாலின் அதிகாரங்களையும் இன்பத்துப்பாலின் அதிகாரங்களையும் அடுத்தடுத்து வருமாறு இவ்வுரை நூலில் அமைத்திருப்பது, சிறிதும் பொருத்தமற்ற, அடாத செயலாகும்.

"அறன்வலியுறுத்த"லுக்கு அடுத்ததாகத் "தகையணங் குறுத்த"லைக் காண்கிறார் சாலமன் பாப்பையா.

*"செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு*
*உயற்பாலது ஓரும் பழி"*

என்ற குறளுக்கு அடுத்து,

*"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"*

என்ற குறள் வருவதே சரி என்று வழக்காடுகிறாரா இவர்?

அதேபோல்,

*"இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்*
*ஒன்னார் விழையும் சிறப்பு"*

என்ற "இடுக்கண் அழியாமை" யில் வரும் குறளுக்கு அடுத்ததாகத் தலைவியின் பிரிவுக்கு அஞ்சுகின்ற தலைவியின் உணர்வாகவும் உரையாகவும் அமைந்துள்ள 'பிரிவாற்றாமை' என்ற அதிகாரத்தின்,

*"இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவுஅஞ்சும்*
*புன்கண் உடைத்தால் புணர்வு"*

என்ற குறள் வருகிறது. இவ்வாறு வரிசைப்படுத்துவதற்கு

இப்பேராசிரியரின் மனம் எவ்வாறு இடம் கொடுத்தது? புலப்படவில்லை.

இனி, இப்பேராசிரியரின் சீர்குலைப்பு வேலை, திருக்குறள் அதிகாரங்களின் பெயர் மாற்றத்திலும் தொடர்கிறது. எடுத்துக்காட்டுகளாகச் சிலவற்றை இங்குக் காண்போம்.

| திருக்குறள் அதிகாரத் தலைப்பு | உரையாசிரியர் இட்டுள்ள புதிய தலைப்பு |
|---|---|
| இகல் (மாறுபாட்டுணர்வு) | நல்லிணக்கம் |
| வெஃகாமை (பிறர் பொருளைக் கவர விரும்பாமை) | கையூட்டு (லஞ்சம்) |
| இரவச்சம் (பிச்சை கேட்டுப்பெற அஞ்சுதல்) | பிச்சை எடுக்க அஞ்சாமை |
| கண்ணோட்டம் (கனிவுடன் ஒத்துப் போகும் தன்மை) | முகம் பார்த்தல் |
| புகழ் (பாராட்டுப் பெறுதல்) | என்றும் நிற்பது |

இவ்வாறு அதிகாரப் பெயர்களைத் தம் விருப்பம்போல் ஏனோதானோ வென்று மாற்றியுள்ளார். 'வெஃகாமை' என்பதற்குப் பிறர் பொருளைக் கவர விரும்பாமை என்பது பொருள். கையூட்டு என்பது பிறர் பொருளைக் கவர்கின்ற பல வழிமுறைகளில் ஒரு முறையே. பிறரை ஏமாற்றி அவர் பொருளைக் கவர முயலுதல், அடாவடித்தனமாகக் கைப்பற்ற முனைதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளைக் குறிக்கின்ற ஒரு அதிகாரத்தலைப்புக்குக் கையூட்டு என்கின்ற ஒன்றை மட்டும் காண்பிப்பது குறையுடையதாகாதா? (இரவு) அச்சம் என்பது அஞ்சாமை என்று இவருக்கு எவ்வாறு பொருள்படுகிறது?

பட்டிமன்றத்தில் சிரிப்பை உண்டாக்குவதற்காக இப்பேராசிரியர் பல வழிமுறைகளைக் கையாள்வார்; பார்வையாளர்களிடையே கலகலப்பை உண்டாக்குவார்.

திருக்குறளுக்கு உரை எழுதுவதையும் அவ்வாறே நினைத்துவிட்டார் போலும். திருக்குறளின் கட்டமைப்பைப் பிளந்து, அதிகாரங்களை அலங்கோலமாக வரிசைப்படுத்தி, அதிகாரப் பெயர்களை ஏனோதானோவென மாற்றி, பாத்திரக்கடையில் யானை புகுந்த கதையாகக் களியாட்டம் ஆடியிருக்கிறார் இவர்.

இவர் திருக்குறளுக்கு உரை எழுதியதன் நோக்கமே, திருக்குறள் கட்டமைப்பை உடைத்து, தம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்தபடி வள்ளுவத்தைச் சிதைப்பதுதானோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

"தமிழில் எத்தகைய இலக்கியப் பயிற்சியும் இல்லாத சாமானியரும் திருக்குறளைத் தெரிந்துகொள்ளும்படி தர முயலும் முயற்சி இது" என்று நூலின் முகவுரையில் இவர் கூறிக் கொள்கிறார். திருக்குறள் கட்டமைப்பைப் பிளந்து பொருத்தமற்ற முறையில் அதிகாரங்களை அடுக்கி அலங்கோலப்படுத்தினால்தான் சாமானியர்களும் திருக்குறளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாகும் என்று இவர் நினைக்கிறாரோ? எதை வைத்துச் சாமானியரின் புரிதலுக்கு உதவியிருப்பதாக இவர் நினைக்கிறார்?

தமிழ்ப்பேராசிரியர் சாலமன் பாப்பையா இவ்வாறு தம் உரைநூலை எழுதி வெளியிட்டுத் திருக்குறளுக்குச் செய்துள்ள இந்தளவு கேட்டை இதுவரை யாரும் செய்திடத் துணியவில்லை. ஆங்கிலத்தில் **high handedness** என்பதற்குத் தன்முனைப்பு, அடாவடித்தனம், தான்தோன்றித் தனம் என்றெல்லாம் அகராதியில் பொருள்கூறப்பட்டுள்ளது. முதுபெரும் தமிழாசிரியரின் இச்செயல்பாட்டை இப்படியெல்லாம் கருதிப் பார்க்கக்கூடாது.

ஊழ்வினைப் பயன் என்று கொண்டு, நம் ஆற்றாமையைத் தாங்கிக்கொள்ள வேண்டியதுதான்.

*"நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்*
*நல்லவாம் செல்வம் செயற்கு"*

என்ற குறள் நம் முன் வந்து நிற்பதைத் தவிர்க்க முடியவில்லை.

# "அருங்கலம்"

பேரறிஞர் **அ. மா. பரிமணம்**

தொன்மைச் சிறப்பும் பண்பாட்டு மாட்சியும் கொண்டு மக்கள் வழக்கில் வாழ்ந்து வரும் ஒரு மொழி, அம்மொழி பேசும் இனத்தின் கருத்து வளத்தினையும் சொற்-பொருள் வளத்தினையும் காட்டி நிற்கும். இந்த உண்மையைத் தமிழ்மொழியின் நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகிய புலனெறி வழக்கத்தால் நன்கு உணரலாம். தமிழ்மொழியினைப் பொறுத்த மட்டில், அவ்வழக்கம் காலந்தோறும் நிலைத்தும் வளர்ந்தும் வந்துள்ள பாங்கினை அறிதற்குச் சங்க நூல்கள் சிறந்த துணையாய்த் திகழ்கின்றன.

மொழியின் தொடக்ககால நிலையில் அம்மொழி பேசுவார்க்கு ஒரு பொருளை அல்லது செயலைக் குறிக்க ஒரு சொல்லே போதுமானதாக இருந்திருத்தல் கூடும். காலப்போக்கில் ஒன்றை உணர்த்துவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் தேவைப்பட்டிருக்கலாம். ஒரு மொழியில் ஒரு பொருளை உணர்த்தப் பல சொற்கள் வழங்குவதனைக் கூறலாம். இதனை ஒரு பொருட் பன்மொழி என்பர் இலக்கணிகள். அவ்வாறே, ஒரு சொல் பல பொருளை உணர்த்துமாறு அமைதலையும் காணலாம். எடுத்துக் காட்டாகப் பகவன் என்னும் சொல், "பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" என்றிங்ஙனம் பல பொருள் உணர்த்துமாற்றை நிகண்டுகள் தொகுப்பதைக் காணலாம். இவ்வாறான சொற்கள் பலபொருள் ஒரு சொல் எனப்படும்.

ஒரு சொல், நிலைமொழியாக-நின்ற சொல்லாக அமைய அதன் முன்னோ பின்னோ பிறிதொரு சொல்லொடு இணைந்து

தொடர்ச்சொல் ஆதலும், அந்நிலையில் யாதானுமொருவகையில் பொருள் மாற்றம் அமைதலும் மொழியிற் காணலாம். எடுத்துக்காட்டாகக் கல் என்னும் சொல் வயிரம் என்னும் சொல்லைத் தனக்கு முன்னே கொண்ட வயிரக்கல் என்றும், கோயில் என்னும் சொல்லைத் தனக்குப்பின்னே கொண்டு கற்கோயில் என்னும் தொடர்ச்சொல்லாக அமையும். இரு தொடர்க்கண்ணும் கல் என்னும் சொல் ஒன்றேயாயினும், பொருளால் மாறுபடுவதனை அனைவரும் அறிவர். "புலி கொல் யானை" எனச் சொற்கள் இயையும் போது, கொல் என்பது கொன்ற என்றும், கொல்லப்பட்ட என்றும் வேறுபட்ட பொருள் படக்காணலாம். கொன்ற எனப்பொருள்படும் போது புலி எழுவாயாகவும், கொல்லப்பட்ட எனப்பொருள்படும்போது புலி செயப்படுபொருளாகவும் அமைவதனைக் காணலாம். ஒரு சொல்லின் இறுதி, கடை, முதல், ஆகிய இடங்களில் நிற்கும் ஓரெழுத்து மாறிப் பிறிதோரெழுத்து நிற்பினும் பொருள் மாறுபடாமல் வழங்கப்படுவதனை "முகம்", "முகன்" என்பன போன்ற சொற்கள் உணர்த்தும். இவ்வாறும் பிறவாறும் சொற்கள் பொருளுணர்த்தும் இயல்பில் அமையும் பாங்கினை மொழியியலாரும் இலக்கணிகளும் தத்தம் இயல்பில் விளக்குவர். பலபொருள் ஒரு சொல் வகையிலமைந்து கலம் என்னும் தமிழ்ச்சொல், கன்னடம் மலையாளம் துளு ஆகிய திராவிட மொழிகளில் முறையே கல, கலம்,கர என்னும் வ்டிவங்களில் வழங்கப்படுகின்றது என்று அறிஞர்கள் காட்டியுள்ளனர். கலம் எனும் சொல்லின் இறுதி மகரம், னரமாக மாறிக் கலன் என்றாகித் தமிழ்மொழியில் ப்ண்டு தொட்டே வழங்கிவரக் காணலாம். இவ்வாறு எழுத்து நிலை மாறியும் பொருணிலை மாறாமல் அமையும் சொல்லினைப் 'போலி' என்று இலக்கணிகள் கூறுவர். இப்போலி மாற்றம் சொல்லின் இறுதியில் நிகழ்ந்திருப்பதால் இதனை "மொழி கடைப் போலி" என்று கூறுவர்.

ஒரே பொருள் தரும் "கலம்", "கலன்" ஆகிய வடிவங்களுள் எது மூல வடிவம் என்று கூறுவதில் இலக்கண ஆய்வாளர்கள் வேறுபடுகின்றனர். இது பற்றித் தொல்காப்பியர், மொழிமரபுப் பகுதியில்

*மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த*
*னகரத் தொடர் மொழி ஒன்பஃதென்ப*

*(தொல். மரபு. 49)*

இதற்கு உரையாசிரியர்களின் உரை தெளிவாக இருக்கவும், ஓர் இலக்கண ஆய்வாளர், அதற்கு மாறாக, "னகர ஈற்றுச் சொற்களே பழமை வாய்ந்தவை யென்றும், அவையே பிற்காலத்து மகர ஈற்றுச் சொற்களாக நிலம் கலம் என ஆயின என்றும் உணரலாம்" என்று கூறியுள்ளார். ஆனால் இக்கருத்திற்கு மாறாக, மகர ஈற்று வடிவமே பழமையானது என்பதனை உணர்த்தும் வகையில் நன்னூலார் தெளிவாக,

*மகர இறுதி அஃறிணைப் பெயரின்*
*னகரமோ டுறழா நடப்பன உளவே*

*(நன்னூல் நூற்பா 122)*

என்று இலக்கணம் கூறியுள்ளதனையும் காட்டியுள்ளார். மகர ஈறுபெற்ற வடிவம் (கலம்) மலையாளத்தில் மாற்றமில்லாது வழங்கப்படுவது கொண்டும்; சங்க நூல்களில் மிகப் பல இடங்களில் கலம் என்னும் வடிவமே தொன்மையானது என்பதனைத் துணியலாம். திரியாத மூலவடிவத்தைப் பலரும் பலவாறாகப் பயன்படுத்துவதும், திரிந்தவடிவத்தை மிகுதியாகப் பயன்படுத்தாமையும் இயல்புதானே.

சங்க நூல்களில் ஏறக்குறைய 130 இடங்களில் ஆளப்பட்டுள்ள கலம் என்னும் சொல் கப்பல், பாத்திரம், குப்பி, ஆபரணம் (அணி), அணிகலத்தின் வடு, உண்கலம், வாத்தியம் (இசைக்கருவி), கறவைக் கலம் எனும் பல பொருட்களில்

அமைந்திருப்பதனைப் பண்டை உரையாசிரியர்தம் உரைகளால் அறியலாம். அச்சொல் வழங்கப்பட்ட சூழல், அதன் முன்னும் பின்னும் இணையும் சொற்கள் ஆகியவற்றால் அச்சொல்லின் பொருளைத் தெளிவாக அறியலாம். எடுத்துக்காட்டாகக் "கலப்பை" (இசைக்கருவிகள் வைத்துக் கட்டப்பட்ட பொறி), கலங்கரை விளக்கம் (கப்பல்கள் கரையுணர்ந்து வருவதற்கு அமைக்கப்பட்ட விளக்கு), மட்கலம் (மண்ணாலாகிய பாத்திரம்), பொற்கலம் (பொன்னாலாகிய அணி) போன்றவற்றைக் கூறலாம்.

இவ்வகையில் அமைந்த அருங்கலம் என்னும் தொடர்ச்சொல் - தொகைச்சொல் - சிந்திக்கத்தக்கது. அரும் என்பது அருமை என்னும் மையீற்றுப் பண்புப் பெயரின் அடிப்படையில் அமைந்த ஒரு வடிவமாகும். அருமை + கலம், அருங்கலம் என்றாகியது. மையீற்றுப் பண்புச் சொற்கள் வருமொழியொடு புணருமாறு கூறுவதற்கென்றே நன்னூலார் ஈறுபோதல் எனத் தொடங்குமொரு தனி நூற்பா இயற்றியுள்ளார். (நன்.136) அருமை என்பதற்கு, அபூர்வம் (Rareness), பெருமை (Greatness), பிரயாசம் (Difficulty), எளிதில் பெறக்கூடாமை, சிறுமை (Smallness), இன்மை (Nothingness) என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பல பொருட்களைத் தந்துள்ளது. அரும் எனத்திரிந்த வடிவம், இங்குக் காட்டப்பட்டுள்ள பொருட்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் உணர்த்தி நிற்குமாற்றை இலக்கியத்தில் காணலாம். அதியமான் தமக்களித்த நெல்லிக்கனி பற்றிக் கூறுங்கால் ஒளவையார், 'பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட சிறியிலை நெல்லித் தீங்கனி' (புறம் 91. 8-9) என்னும் செய்யுட்பகுதியில் இடம் பெறும் அரும் என்னும் சொற்கு அரிய என்றே பொருள் கூறியுள்ளார் அதன் உரையாசிரியர். இங்கு அச்சொல், அபூர்வம், பெருமை, எளிதில் பெறக்கூடாமை முதலிய பல பொருள் கொள்ளுமாறு அமைந்திருப்பதனைக் காணக்கூடும். அருங்கலம் என்னும் தொகைநிலைத்தொடர்

ஒருசொன்னீர்மைத்தாய் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது. அருங்கலம் என்னும் சொல், சங்கநூல்களில் பன்னிரண்டு இடங்களில் (மலை.71, பதிற்.52-3,64-5,71-21, பதி.9, இருங்கண் 1,புறம் 56-17,171-10,198-15,367-8,395-28,397-18) இடம் பெற்றுள்ளன. அவ்விடங்களிலெல்லாம் அச்சொல், கிடைத்தற்கரிய, பெறுதற்கரிய, பெருமைசான்ற என்பன போன்ற பொருளில் ஆபரணங்களையே (அணிகள்) குறிப்பதாக உள்ளது. "அருங்கல வெறுக்கை" என அமைந்த இரண்டு இடங்களிலும் கூட (புறம் 146-1, 378-11) அரிய அணிகளாகிய செல்வம் என்னும் பொருளிலேயே அச்சொல் அமைந்துள்ளது. அருங்கலம் என்னும் இச்சொல் ஏனோ சங்க அகப்பாடல்களில் இடம் பெறவில்லை.

சங்கநூல்களின் காலத்திலேயே தமிழகத்தில் சிவன், திருமால், முருகன், கொற்றவை முதலிய தெய்வ வழிபாடு பரவலாக இருந்துள்ளதோடு சமணம் புத்தம் முதலிய வடநாட்டுச் சமயங்களும் விளங்கியிருந்ததனைக் குறிப்பாக உணர்த்தும் கூறுகள் சங்க இலக்கியங்களில் அரிதாகக் காணலாம். கிடைத்துள்ள சங்கநூல்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட வகையில் (எடுத்துக்காட்டாகத் திணைக்கோட்பாடு) அமைந்த பாடல்களின் தொகுப்புக்களாகவே உள்ளமையால், தமிழகத்துக்குரிய தெய்வ வழிபாட்டு நிலை,வடஇந்தியச் சமயச் சார்பிலமைந்த வழிபாட்டு முறை ஆகியன பற்றி விரிவாகக்கூறும் பாடல்கள், நூல்கள் இடம் பெறவில்லை போலும். ஆனால் கடைச்சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய காப்பிய கால எல்லையில் அச்சமயங்களின் சார்பிலமைந்த நெடிய இலக்கியங்கள் தோன்றி அவற்றின் கொள்கைகளை விளக்கி நிற்பனவாயின.

அவ்வகையில், அற்றை நாள் தமிழகத்தில் கால்கொண்டும் செல்வாக்குப் பெற்றும் விளங்கிய சமயங்களாகச்

சமணத்தையும் பௌத்தத்தையும் கூறலாம். அச்சமயங்களும், அவற்றைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்தவர்களும் வேற்று மொழியினராதலின் அவர்கள் தமிழ் மொழியினைக் கற்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. அவ்வாறே அவற்றை ஏற்ற தமிழ் மக்களும் அப்பிறமொழிகளைக் கற்கவும் அவற்றுள் வல்லுநர்களாகவும் முற்பட்டனர். சில நூற்றாண்டுகட்கு முன்னர்க் கிறித்துவ சமய ஊழியம் கருதி அரசுச் செல்வாக்கோடு தமிழகம் போந்த மேலைநாட்டார் மேற்கொண்ட உத்தி அற்றைநாள் சமண - புத்த சமயப் பரப்புநர்களும் கொண்டிருந்தனர். சமய அடிப்படையில் அன்று ஏற்பட்ட கலப்பின் காரணமாகத் தமிழில் பிறமொழிக் கலப்பும், திரமிளசங்க என்றவொரு சங்கத் தோற்றமும், பல்வேறு இலக்கண-இலக்கிய நூல்களும் தோன்றலாயின. அவற்றின் விளைவாகச் சமய அடிப்படையிலும் பிறவகையிலும் தமிழ்ச் சொற்கள் பல புதுப்பொலிவும் வளமும் பெறுவனவாயின. ஐந்தெழுத்து (ஐந்து+எழுத்து) என்பது ஐந்தெழுத்துகளால் என்றே பொருள்படும் சமயச் செல்வாக்கில் ஐந்தெழுத்துக்களால் ஆகிய மொழியை மந்திரமாகக் கொண்டு போற்றும் நிலை ஏற்பட்டது. சைவத்தில் 'ந,ம,சி,வ,ய -வும், சமணத்தில் 'அ,சி,ஆ,உ,சா' -வும் ஐந்தெழுத்து மந்திரம் எனக்கருதப்பட்டுத் திரு என்னும் முன்னடை சேர்க்கப்பட்டுத் திருவைத்தெழுந்து என்று போற்றப்படுகின்றது. அவற்றின் பொருள் முறையே சிவனுக்கு வணக்கம் (போற்றி), அருகூர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாரணர் ஆகியோருக்கு வணக்கம் என்பனவாகும். இவ்வாறு பல குறியீட்டுச் சொற்களும், இயல்புச் சொற்களும் தம் பொருள் உணர்த்தும் எல்லையை நிரம்பக் காணலாம். அவ்வகைச் சொற்களுள் அருங்கலம் என்பதும் ஒன்று.

மன்னரும் மக்களும் அணிவனவும், மன்னர்கள் மற்றையோர்க்கு வழங்குவனவுமான அரிய ஆபரணங்களை உணர்த்தச் சங்க நூல்களில் பயன்படுத்தப்பட்ட 'அருங்கலம்'

எனும் சொல் அப்பொருளோடு, இந்திரன் போலும் தெய்வங்கள் அணியும் அரிய அணிகள், அவற்றைவைத்துக் காக்கும் பேழை போன்றவற்றையும் உணர்த்த இளங்கோவடிகள் தம் காப்பியத்துள் அச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். புகார் நகரத்தெருக்களைக் கூறுமிடத்து, "மாசறு முத்தும் மணியும் பொன்னும், அருங்கல வெறுக்கையோடு... நனந்தலை மறுகு" என்னும் போது மதிப்புரிய ஆபரணங்களையே குறிப்பிட்டுள்ளார். கொற்றவையைக் குறிப்பிடும் போது "அருங்கலப்பாவை" (சிலம். 12:71) அருங்கலம் என்பதனை இரத்தினம் என்று அரும்பதவுரையாளரும், "தொடியும் கலங்களும்" (அணிகள்) என அடியார்க்கு நல்லாரும் விளக்கியுள்ளனர். மதுரை நகர எல்லையில் திறந்து விளங்கிய வாயிலைக் கூறும் போது, இந்திரனது பெறுதற்கரிய மணிக்கலம் பெய்த பணிப்பெட்டகம் போலிருந்தது என்பதனை "ஆயிரங்கண்ணோன் அருங்கலச்செப்பு வாய்திறந்தன்ன" என்னும் உவமையால் விளக்கியுள்ளார். மனித நிலையில் பயன்பட்ட அருங்கலம் எனும் சொல் தேவநிலையில் எண்ணப்படுவோருக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்திரனுடைய அணிகளை வைத்துக் காக்கும் பெட்டகத்தைச் செப்பு என்னும் சொல்லால் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சமயச் சார்பால் ஐந்தெழுத்து சிறப்புற்றது போல மூன்று என்னும் சொல்லும் சிறப்புற்றுள்ளது. சைவத்தில் பதி, பசு, பாசம் எனும் மூன்றும் முப்பொருள் எனப்படும். புத்தம், சங்கம், சரணம் ஆகியன பௌத்த சமயத்தில் மும்மணிகள் (மூன்று அரிய இரத்தினங்கள்) எனப்படும். அவ்வாறு நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றும் சமணத்தில் அரிய மும்மணிகளாகக் கூறப்படும். இதனை நச்சினார்க்கினியர் 'இரத்தினத் திரயம்' என்பார். அரிய மணிகள் அல்லது அவை பதிக்கப்பட்ட பணிகள் ஆகியன மக்கள் தம் புறத்துறுப்புக்களில்

அணியுமவற்றையே குறிக்கும். அச்சொல், நற்காட்சி முதலியவற்றைக் குறிக்கும் போது, சான்றோரின் அகப்பண்புகளை உணர்த்துவதாக அமைகின்றது. அவ்வகையில் அருங்கலம் என்னும் சொல்லைத் தனியாகவும், முன்பின் ஒட்டுச் சேர்த்தும் சிறப்புப் பொருளில் வழங்கியுள்ளதில் சமணப்புலவர்கள் முன் நிற்கின்றனர்.

சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய காலப்பகுதியில், தமிழகத்தில் செல்வாக்குப்பெற்ற வைதீக, சமண, புத்த சமயங்களின் சார்பினால் தோன்றிய மொழிக்கலப்பின் விளைவாகத் தமிழ்ச்சொல்-பொருள் ஆகியவற்றிலும் தாக்கங்கள் அமைந்தமை போல, தொல்காப்பியங்கூறும் செய்யுளியல் உவமவியல் ஆகியவற்றிலும் தாக்கங்கள் தலை காட்டின. அதன் விளைவாகத் தமிழ் யாப்பிலக்கணத்திற்குத் துறை, தாழிசை,விருத்தங்கள் முதலிய புது வடிவங்களின் வரவுகள் பெருகலாயின. அதனால் புதிய யாப்பிலக்கண நூல்களான யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியனவும் அவற்றின் விளக்கங்களும் தோன்றிச் செல்வாக்குப் பெற்றதோடு, அவற்றிற்கான தொல்காப்பியப் பயிற்சி குறையவும் வழிகோலின. அவ்வகையில் மயேச்சுரர் முதலான பிறரும் நூல் செய்தாராயினும் அவையெல்லாம், காலப்போக்கில் மறைந்து சில நூற்பாக்களே இன்று எஞ்சி நிற்கக் காணலாம். யாப்பருங்கலம் இயற்றிய குணசாகரரும், காரிகை இயற்றிய அமிர்தசாகரரும் சமணர்களாதலின் அருங்கலம் என்பதனைத் தம் நூற்பெயரில் இணைத்துள்ளனர். யாப்பாய அரிய அணி என்னும் கருத்திலேயே இவர்கள் அப்பெயரை வைத்திருத்தல் வேண்டும். யாப்பருங்கலத்தின் பாயிரத்தில் இடம்பெறும் "பாற்படு தென்தமிழ்ப் பரவையின் வாங்கி யாப்பருங்கல நனி யாப்புற வகுத்தோன்" என்னும் தொடரில் இடம் பெறும் தமிழ்ப்பரவை என்பதற்குத் தமிழ்க் கடல் எனப் பொருள் கொண்டு, அருங்கலம் என்பதற்கு, அரிய கலம் (கப்பல்)என்று

உருவகம் செய்து பொருள் கூறுவர். அங்ஙனமாயின் அருங்கலம் என்பது அரிய கலம் (மரக்கலம், கப்பல், தோணி) என்று வேறுபொருள் குறிக்கும். அவ்வாறு உருவகம் செய்து கூறுவதில் தவறில்லை. அச்சிட்ட பதிப்புகள் அனைத்திலும் பரவை என்றே உளது. பாடபேதம் காணப்படவில்லை. பதிப்பித்தோர் அனைவரும் ஏடு பார்த்தவர்கள் எனக் கூறவும் இயலாது. அச்சொல் பாவையின் என்றிருக்கலாம் என்பது ஊகம். இந்த ஊகம் மெய்யாகுமானால், "தமிழ்ப் பாவையின் - தமிழ்த்தாயின் - வாங்கி யாப்பருங்கலம் நனியாப்புற வகுத்தோன்" என்பது தொடராகும். தமிழ்க் கடலினின்றும் (யாப்புப் பொருட்களை) வாங்கி அருங்கலம் செய்தான் என்பது உள்ள பாடத்திற்கும், தமிழ்ப் பாவையின் (பெண்ணிடமிருந்து) பெற்று அரிய கலத்தை (ஆபரணம்) வகுத்தளித்தான் என்பது ஊகப் பாடத்திற்கும் பொருளாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, தாமியற்றிய மனோன்மணிய நாடகத்தைத் தமிழ்த்தாயின் சுண்டுவிரற்கு அணி போலப் படைத்தனன் எனக் கூறியாங்குக்-குணசாகரரும் பண்டு தமிழன்னைக்கு அருங்கலம் அமைத்துப் பூட்டினார் என்று கொள்வதும் ஏற்புடையதாகும். பாவை என்று ஊகம் செய்வதற்குப் பண்டு ஓலையில் எழுதுங்கால், பாவையும், பரவையும் ஏறத்தாழ வேறுபாடின்றி அமைந்திருப்பதனை ஏடுபடிப்போர் உணர்வர். மேலும் யாப்பருங்கலப்பாயிரத்தின் (நேரிசை ஆசிரியம்) ஒன்பது அடிகளில் எட்டு அடிகளில் முதற்சீரும் மூன்றாம் சீரும் குற்றெழுத்து வகையால் மோனை அமைந்திருக்க இந்த ஓரடி மட்டும், 'பாற்படு தென்றமிழ்ப்பரவையின்' என்று மாறி வந்துள்ளதும் (பா.....ப.....) சிந்திக்கத்தக்கது.

யாப்பருங்கலம் என்பதில் "கலம்" அணியை உணர்த்துமாற்றைப் பிறிதொரு எடுத்துக்காட்டாலும் உணரலாம். வைதீக சமயத்தை எதிர்த்து வடநாட்டில் தோன்றிய சமணம் புத்தம் ஆகிய சமயங்கள் தம் சமயங்களை வளர்ப்பதற்குத்

துறவியர் தலைமையிலான சங்க அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டன. சங்கம் என்னும் பெரும்பிரிவில் பற்பல உட்பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவ்வச்சமயங்களின் துறவற இல்லறப்பகுதிகள் இயக்கப்படுகின்றன. அவ்வகையில் தென்னகம் வந்த சமணம் தென்னாட்டில் திரமிள சங்கம் ஒன்றை நிறுவி அதன் வழி, சமய-மொழி-மக்கள் தொண்டுகள் செய்யப்பட்டன. அவ்வகையில், அறிஞர் து.ஆ. கோபிநாத ராவ் கருத்தினை வாங்கிப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அது வருமாறு: "ஜைனாசாரியர்கள் பற்பல சங்கத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் பல கணங்கள் இருந்தன. இக்கணங்களொவ்வொன்றிலும், பல கச்சைகள் அடங்கியிருந்தன. தென்தேசத்துச் சங்கங்களில் மிகப் பிரபலமாயிருந்தது நந்திகணம்; நந்திகணத்தில் மிகச் சிறந்தது அருங்கலான்வயம். இந்த அன்வயத்தார் முதன் முதல் தீபங்குடியிலுள்ளோராயிருந்தனர். இவர்கள் தமிழரேயாயினும் தமிழ், கன்னடம்,சமஸ்கிருதம் என்ற மொழிகளில் புலமையுடையோராய் விளங்கினார்கள். அன்வயம் என்பது சமண சமய அமைப்பான கணம் என்னும் பிரிவினுள் அமைந்த கூட்டம் என்று புலனாகிறது. இங்கு அருங்கலம் - கப்பல் என்னும் பொருளினும் மேலாக அரிய அணிகலன் என்னும் பொருள் ஏற்புடையதாக விளங்கக் காணலாம்.

இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ள "அருங்கலச் செப்பு" என்னும் தொடர், பின்னர்த்தோன்றிய சமணத் தமிழ்ச் சான்றோர்களை மிகவும் கவர்ந்துள்ளது. அவர்களுள் ஒருவர் "அருங்கலச் செப்பு" என்னும் பெயரில், சமணர்களில் இல்லறம் மேற்கொண்டொழுகும் சிராவகர்களின் அறங்கூறும் அரிய சாத்திர நூலாகும். வடமொழியில், ஏறத்தாழக் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சமந்தபத்ராசாரியர் என்பவரால் எழுதப்பட்ட "இரத்தின கரண்டகம்" என்னும் சமண

சமயச் சாத்திர நூலைப்பின்பற்றி இந்நூல் எழுதப்பட்டதாகும். அழகிய 181 குறள் வெண்பாக்களால் ஆகிய நல்ல தமிழில் அமைந்த சமணசாத்திர நூலாகும். இந்நூல் பற்றிக் கூறுமிடத்தே திரு. மு. அருணாசலம் அவர்கள், "தமிழ் நூற்பெயர் வடமொழி நூற்பெயரின் மொழிபெயர்ப்பு என்று கருதுவதை விட, கால வகையாற் பார்க்கும் போது சமந்திரபத்ராசாரியார் சிலப்பதிகாரத் தொடரை அறிந்து வடமொழியாக்கிக் கொண்டார் என்று கொள்வதே உண்மையாயிருக்கும் போலும்" (தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு பக் 781). இந்த நூலாசிரியர் தம் நூலிற்குத் தாம் இட்ட நூற்பெயரை நூலின் சிறப்பு, பயன் ஆகியன கூறுங்கால் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

*அருங்கலச் செப்பினை ஆற்றத் தெளிந்தார்*
*ஒருங்கடையும் மாண்பு திரு* (175)

*முத்தி நெறிகாட்டும் முன் அறியார்க் கெல்லாம்*
*சித்தி அருங்கலச் செப்பு* (179)

*தீராவினைதீர்க்கும் சித்தி பதம் உண்டாக்கும்*
*பாராய் அருங்கலச் செப்பு* (180)

நூற்பயன் கூறும் குறள்களுக்கு இடையே வள்ளுவப் பெருந்தகை செய்த திருக்குறள் ஒன்றினை முழுவதுமாக (காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றும் நாமம் கெடக் கெடும் நோய்) எடுத்தாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தே சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியர்களுள் ஒருவரான கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் திருவருட்பயன் என்னும் பெயரில், வெண்பா யாப்பில் சாத்திர நூல் எழுதுவதற்கு இந்நூல் முன்னோடியாகும். அருங்கலச் செப்பினைத் திருத்தக்க தேவர் அருமணி வயிரம் வேய்ந்த அருங்கலப் பேழை என்று குறிப்பிட்டுள்ளார் (சீவக.557). அதற்கு, "அருங்கலம் வைத்தற்குச் சமைத்த மணியாகிய வயிரம் வேய்ந்த பெட்டி" என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார்.

சீவகசிந்தாமணிக்குப் பிற்பட்டதும், தேவாரத்திற்கு முற்பட்டதுமான ஒருகாலத்தில் தமிழில் தோன்றியதெனக் கருதப்படுவது சூளாமணி என்னுமொரு சமணக் காப்பியம். விருத்தப் பாக்களாலியன்ற இந்நூலின் ஆசிரியர் தோலாமொழித் தேவர், அருங்கலம் என்னும் சொல்லினை அதன் அருமையும் பெருமையும் நோக்கி அடை மொழியாக்கிப் பலவகையில் பயன்படுத்தியுள்ளார். தன் காப்பியத்தில் இடம்பெறும் இரத்தினபுரத்து அரசன் மகன் சுவர்ணரதன் என்பவனைக் குறிக்கும் போது, தோலாமொழித் தேவர் அப்பெயரைத் தமிழ்ப் படுத்தி, (அருங்கலத் தேரின் பேரன்' என்று குறிப்பிட்டுள் ளார்.(சூளா. 322) அருங்கலம் என்பதற்குப் பொன் எனப் பொருள் கொண்டு சுவர்ணரதன் என்பதனைப் பொற்றேரான் எனப் பொருள் படுமாறு ஆண்டுள்ளார். பயாபதி மன்னனின் தேவிமார் பலரைக் குறிப்பிடுங்கால் "அருங்கலக் குழாத்து அரசன் தேவிமார்" (சூளா 591) என்கின்றார். அரிய அணிகலன்களை அணிந்துள்ள அரசமா தேவியர் என்பது கருத்து. அரியமுடிக்கலன்கள் (கிரீடம்) அரசர்களுக்கே உரியன என்னும் கருத்தில்,

*அருங்கலம் உலகின் மிக்க அரசர்க்கே உரிய அன்றிப்*
*பெருங்கல முடையரேனும் பிறர்க்கவை பேணலாகா*

என்று (சூளா. 1015) குறிப்பிடுகின்றார். இங்கு அரசர் அணியும் முடி அருங்கலம் எனப்பட்டது. சங்க நிதி பதும நிதி என்னும் சொற்கள் மிகப்பேரெண்களால் சுட்டப்படும் செல்வங்களைக் குறிப்பிடும். "சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து தரணியொடு வானாளத் தருவரேனும்" என்பது தேவாரம் அந்நிதிகள் அவற்றின் பெருமையால் மன்னர் போன்றோரால் மதிக்கப்படும் தன்மையது என்பதனை உணர்த்தும் வகையில் அவற்றைத் தேவர் "அருங்கலப் பெருந்தெய்வம்" என்று குறிப்பிட்டுள்ளார். (சூளா. 1505) அப்பெருஞ் செல்வங்களை, முற்பாட்டில் (சூளா.

1504) "சக்காப்பெருஞ் செல்வம்" என்றும் அவை பூசனை செய்யப்பெற்று அரசக் கருவூலத்தைச் சார்ந்தன என்றும் குறிப்பிடுகின்றார். மேலுமவர், பயாபதி மன்னன் அரியணையில் வீற்றிருந்தமையினை, "சூரியன் அலர்ந்த சோதி அருங்கலப் பீட நெற்றித், தாரகை அணிந்து தோன்றும் சந்திர சவியனானான்" (சூளா. 510) அருங்கலம் போலச் சிறந்த அரியணை என்றும் அருங்கலம் அணியப் பெற்ற அரியணை என்றும் உரையாசிரியர் அருங்கலப் பீடம் என்பதனை விளக்குவர். மேலும், சமண நூலான சீபுராணத்துள் இடம்பெறும் இராதவர்த்தம் எனும் மலையின் பெயரை இவ்வாசிரியர் "அருங்கலப் பெயர் கொள் குன்று" (சூளா. 1259) என்று மொழி பெயர்த்துக் குறிப்பிட்டுள்ளார். இது, பிற மொழிச் சொற்களை ஒலி பெயர்த்தும் மொழிபெயர்த்தும் தமிழிற் கொள்ளும் வகையில், வடமொழிக் கிரௌஞ்ச கிரியினைக் குருகுபெயர்க்குன்றம் (சிலப். குன்றக்குரவை) எனத் தமிழ்ப் படுத்திக் கொண்டாற் போல, மொழி பெயர்த்துக் கொண்டதாகும். ஒரு நேரிய கம்பும் கயிறும் வளைத்துக் கட்டப்பட்ட நிலையில் வில் எனும் புதிய பெயரும், விசையும் பெற்றுப் பயன் நல்குமாறு, அரும்+கலம் எனும் எளிய சொற்கள் இணைந்து புதிய பொருள் வளம் பெற்றுப் பயன்படுவதனைக் காணமுடிகிறது.

சைவ மரபில் தோன்றிச் சமணம் சார்ந்து தமிழோடு வடமொழி, பிராகிருதம், பாலி முதலியவற்றைக் கற்றுப் புலத்துறை முற்றி, சமணம் புத்தம் முதலிய சமயங்களின் கோட்பாடுகளை நன்குணர்ந்து, பின்னர் பல கொடுமைகட்கு ஆளாகிச் சைவத்திற்கு மீண்டு வந்து தொண்டு புரிந்து நெடுங்காலம் வாழ்ந்த அப்பரடிகள் அருங்கலம் எனும் தொடர்ச் சொல்லின் பொருள் மாட்சியினை நன்குணர்ந்து தம் தேவாரத்துள் ஆண்டிருப்பது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

திருவைந்தெழுத்து, சீ பங்சாட்சரம் என்றும் முறையே தமிழிலும் வடமொழியிலும் கூறப்படும் "நமசிவய" என்பது சைவ சமயத்தவர்க்குரிய மகாமந்திரமாகும். தூல, சூக்கும, அதிசூக்கும முதலாக வகைப்படுத்தப்பெற்று ஓதிப்பயன் கொள்ளும் அம்மந்திரம் நினைத்தல், பிறர்க்குக் கேட்காதவாறு நாவினால் ஓதல், பிறர்க்குக் கேட்குமாறு ஓதல் ஆகிய வகையில் அது பயிலப்பெறும். இவற்றுக்கெல்லாம் தனித்தனிப் பெயரும் பயனும் கூறப்படுவதுண்டு. சைவத்திற்கு உயிர்நாடி எனத்தகும் இம்மந்திரப் பெருமையும் பயனும் சைவ சமயக்குரவர் நால்வராலும் நன்கு கூறப்பட்டுள்ளன. "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே", "நன்னெறியாவது நமச்சிவாயவே", "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே", "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்பன நால்வர் நவின்ற திருமுறைத் தொடர்களாகும்.

பொருளால் வளம் பெற்றுத் திகழும் அருங்கலம் என்பதனை அப்பரடிகள் தம் தேவாரத் திருமுறையில் இரண்டு பாடல்களில் அழகாகப் பயன்படுத்தி சைவர்க்கு அதன் இன்றியமையாமையினைப் புலப்படுத்தியுள்ளார். நாலாம் திருமுறையின் பதினோராம் பதிகமாக அமைவது நமச்சிவாயத் திருப்பதிகம். சொற்றுணைவேதியன் எனத் தொடங்கும் அப்பதிகத்தின் மூன்றாம் ஐந்தாம் பாடல்கள் "அருங்கலம்" எனும் சொற்றொடரால் அணி செய்யப்பட்டுள்ளன.

அவை வருமாறு,

*பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை*
*ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்*
*கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது*
*நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே*

*(தேவா. 4-11-3)*

*வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்*
*அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்*
*திங்களுக் கருங்கலம் திகழும் நீண்முடி*
*நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே*

*(தேவா. 4-11-5)*

இப்பாடல்களில் அமைந்துள்ள அருங்கலச் சொல்லாட்சியின் அருமை பெருமைகள் ஈண்டு விரிக்கப்பெருகும். அறிந்தார்வாய்க் கேட்டின்புறலாம். முகத்தில் காது, மூக்கு, கழுத்து, தலை போன்றவற்றிற்கெல்லாம் பொன்னாலுமணியாலும் அணிகள் பூட்டலாம். அங்ஙனம் பூட்ட இயலாது, திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டொளிரும் நாவினுக்கு, நமச்சிவாய மந்திரத்தை அருங்கலமாக அணிவித்த பெருமை அப்பரடிகளைச் சாரும். தமிழ்த் தொடரான அருங்கலம் என்பதன் பெருமையினை ஐந்தெழுத்திற்குச் சமய மக்களிடையே நிலவும் பெருமையினை உணர்த்த அப்பரடிகள் நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே என்று கூறியிருப்பது, வேறுபடு சமயங்களின் உண்மைகளை உணர்ந்து, சைவ சமய மாட்சி கூறிய தனிச்சிறப்புக் கொண்டதாகும்.

அன்பு அச்சகம், மதுரை – 1. ✆ 741116